[29th January 1972

Unemployed Engineering Graduates

*63 Q.—Thiru G. SWAMINATHAN and Thiru M. RAJAH IYER : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) the number of unemployed engineering graduates in the State as on date; and

(b) the steps taken by the Government to solve their unemployment problem ?

வேலை கிடைக்காத பொறியியற் பட்டதாரிகள்

திரு. ஜி. சுவாமிநாதன் & திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் இன்றுவரை வேலை கிடைக்காத பொறியியற் பட்டதாரிகளின் எண்ணிக்கை என்ன ?

(இ) அவர்களது வேலையில்லாச் சிக்கலைத் தீர்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) 2,822 (30—9—1971 அன்று உள்ளபடி).

(இ) வேலையற்றிருக்கும் பொறியாளர்களுக்கு ஓரளவு வேலை வாய்ப்பு வசதியளிக்க அரசு அண்மையில் பாசன மின்சக்தித்திட்டங்களை ஆய்வு செய்யும் பணியையும் நிறைவேற்றும் பணியையும் மேற்கொண்டுள்ளது. அத்துடன் 600 பொறியியல் பட்டதாரிகளுக்குத் தொழில் பழகுவோர்க்குரிய பயிற்சியளிக்கும் திட்டம் 1970 அக்டோபரில் அரசு ஒப்புதல் பெற்றுள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன் : கடந்த 3, 4 ஆண்டுகளாக வேலையில்லாத பொறியியற் பட்டதாரிகள் தொகை அதிகரித்து வருகிறது என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சொல்லாமலே அது விளங்கும்.

Rural Housing Scheme

*64 Q.—Thiru V. ISVARMURTI : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether the Union Government have undertaken the entire cost of Rural Housing in this State; and

(b) if so, the details thereof ?

கிராமப் புற வீடு கட்டும் திட்டம்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் கிராமப்புற வீடு கட்டும் திட்டத்தின் செலவு முழுவதையும் மத்திய அரசு ஏற்றுக்கொண்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

29th January 1972]

மாண்புமிகு திரு. க. ராசாராம்: (அ) & (இ) இல்லை. எனினும் இந்திய அரசு கிராமப்புறங்களில் வீட்டு மனை இல்லாத தொழிலாளர்களுக்கு வீட்டு மனைகள் இலவசமாக வழங்க ஒரு திட்டத்தை உருவாக்கியுள்ளது. இத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு 100 சதவீதம் மானியமாக, மாநில திட்ட வரம்பிறகு புறம்பாக, மாநிலங்களுக்கு சில நிபந்தனையின்கீழ் வழங்கும்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: தலைவர் அவர்களே, மாநில அரசு கிராமப்புற வீடு கட்டும் திட்டம் ஏதாவது வைத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. ராசாராம்: மாநில அரசுதான் இந்தக் கிராமப்புறங்களுக்கான திட்டத்தை வரைமுறையாகச் செய்து வருகிறது. மத்திய அரசு உதவியும் வருவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்: கிராமப்புறங்களில் வீடு கட்டும் திட்டத்தில் அந்தந்தக் கிராமத்தில் எவ்வளவு ரூபாய் அதிகபட்சம் ஒரு வீட்டுக்குச் செலவழிக்க வேண்டியிருக்கும்?

மாண்புமிகு திரு. க. ராசாராம்: இந்தத் திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களில் வீடு, வீட்டுமனை இல்லாத ஒருவருக்கு வீட்டு மனைக்கு 100 சத விகிதம் மானியமாகத் தந்து இலவசமாக வழங்கலாம் என்று மத்திய அரசுத் திட்டம் சொல்லியிருக்கிறது. 100 சதுர கெஜத்திற்கும் அதிகமில்லாத அளவு நிலம் தருவதாகவும் அதற்கு ரூ. 150 வரையிலும் செலவு செய்யலாம் என்றும் அந்தத் திட்டத்தில் குறித்திருக்கிறார்கள்.

South Madras Neighbourhood Scheme

* 65 *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Backward Classes, be pleased to state—

(*a*) whether it is a fact that compensation has not yet been paid to owners, from whom lands were acquired in the year 1962, for the South Madras Neighbourhood Scheme;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) the action proposed to be taken by the Government in the matter?

தென் சென்னை புறநகர் திட்டம்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தென் சென்னை புறநகர் திட்டத்திற்காக 1962-ஆம் ஆண்டு கையகப் படுத்தப்பட்ட நிலங்களின் சொந்தக்காரருக்கு இழப்பீட்டுத் தொகை இன்னும் வழங்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

(உ) இது குறித்து அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. க. ராசாராம்: (அ) இல்லை.

(இ) & (உ) வினாக்களுக்கு இடமில்லை.